# அட்டாளைச்சேனைப் பிரதேசத்தின் பொருளாதார, சமூக நிலையும் தொழில் வாய்ப்புக்களும்

*றபீக்கா அமீர்தீன், சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*சமூக விஞ்ஞானத்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்*

**அறிமுகம் :**

இன்று உலக நாடுகள் விருத்தியடைந்த நாடுகள், விருத்தி அடைந்துவரும் நாடுகள், துரிதமாகக் கைத்தொழில் மயமாகிக் கொண்டிருக்கும் நாடுகள் என அவற்றினது பொருளாதார சமூக அபிவிருத்தி நிலைமைகளுக்கேற்ப பலவாறாக வகைப்படுத்தப் படுகின்றன. அதேபோல் ஒரு நாட்டினுடைய பிரதேச விருத்தி வேறுபாடுகளும் அப்பிரதேசத்தினுடைய பௌதீக, பொருளாதார, சமூக அபிவிருத்தி நிலைமைகளுக்கேற்ப வேறுபடுகின்றன. ஒரு நாட்டினுடைய விருத்தி ஒரு பிரதேசத்தின் விருத்தியில் தங்கியிருக்கின்றது. ஒரு பிரதேசம் விருத்தியுறும் போது ஒரு நாடு விருத்தியுற வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே, பிரதேச வேறுபாடு, பிரதேச சமமின்மை என்பன நீக்கப்படும் போது ஒரு நாடு அபிவிருத்தி ஏற்பட வாய்ப்பு ஏற்படுகின்றது. பொருளாதாரக் காரணிகளின் அடிப்படையில் மட்டும் ஒரு பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியினை விளக்க முடியாது. அதற்குப் பல்வேறு சமூக பல்வேறு பொருளாதார, அரசியல், பண்பாட்டு வரலாற்றுக் காரணிகளின் கூட்டுச் செயற்பாடு அவசியம் என்பதை Myrdal என்பவரின் 'Asiandrama' என்ற நூல் எடுத்துக் காட்டுகின்றது. ஒரு நாடு அபிவிருத்தியடைய வேண்டுமாயின் அந்நாடு சகல துறைகளிலும் அபிவிருத்தியடைய வேண்டும். அது போலவே அந்நாட்டினுடைய பிரதேசங்களும் விருத்தியுற வேண்டும். அந்தவகையில் இலங்கையின் தென்கிழக்கில் அமைந்துள்ள அட்டாளைச்சேனைப் பிரதேசம் அதனுடைய அபிவிருத்தியில் பௌதீக, பொருளாதார, சமூகநிலை தொழில் வாய்ப்புக்கள் என்பன பற்றி இதில் நோக்கப்படுகின்றது.

## அமைவிடம் :

இலங்கையின் தென்கிழக்கில் அமைந்துள்ள அட்டாளைச்சேனை என்கின்ற பிரதேசம் பற்றிக் கூறுவதாயின், முஸ்லீம் மக்கள் செறிவாக இங்கு வாழ்கின்றனர். அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகப் பிரிவானது 94.5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. இப்பிரதேசம் வடக்கே களியோடையும், தெற்கே தைக்கா நகரையும், கிழக்கே வங்காள விரிகுடாவையும், மேற்கே தீகவாபிய கிராமத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளன. 1930 ஆம் ஆண்டு அட்டாளைச்சேனை கோணவத்தைக்குக் கிழக்கே இருந்த காட்டுப் பிரதேசம் குடியேற்றத்தின் கீழ் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனால் அட்டாளைச்சேனையில் குடியிருப்பு பரப்பளவு மேலும் விசாலமடைந்தது.

## பௌதீகத் தன்மை :

இப்பிரதேசத்தின் பௌதீகத் தன்மையை நோக்கின் இப்பிரதேசம் கடல்சார்ந்த பகுதியில் மணல் மண்ணையும் ஏனைய பகுதிகளில் இருவாட்டி மண், களிமண், செம்மண் போன்ற மண் அமைப்புகளைக் கொண்ட ஒரு சமதரைப் பிரதேசமாகும். இப்பிரதேச காலநிலை உலர்வலயத் தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது. டிசம்பர் – பெப்ரவரி மாதங்களில் இப்பகுதிக்கு வடகீழ் பருவக்காற்று (மாரி) மூலம் அதிக மழை கிடைக்கின்றது. இங்கு தென்மேற் பருவக்காற்றுக் காலம் (கோடை) காலமாகவும் குறைந்த மழைவீழ்ச்சியும் கிடைக்கின்ற காலப் பகுதிகளாக உள்ளன. இப்பிரதேசத்தின் பௌதீகத் தன்மை அடிப்படையில் பொருளாதார வேலைவாய்ப்புக்கள்

நிர்ணயிக்கப் படுவதுண்டு. இங்கு நெற்செய்கை (விவசாயம்) பிரதான இடம்பெறுகின்றது.

**வரலாறு :**

இலங்கை ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 9 மாகாணங்களாகவும் பல மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் கிழக்கு மாகாணம் பல பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டு அக்கரைப்பற்று என்று கருங்கொடித்தீவு மாற்றப்பட்டது. அம்பாறை மாவட்டம் ஆரம்பத்தில் மட்டக்களப்பு மாவட்டத்துடன் இணைந்ததாகவே காணப்பட்டது. பின்னர் இது அம்பாறை மாவட்டம் மட்டக்களப்பிலிருந்து பிரிக்கப்பட்டு தனி மாவட்டமானது. அம்பாறை மாவட்டத்தைப் பராமரிப்பதற்காக அரசாங்க முகவர் பொறுப்பாக இருந்தார். இவரின் கீழ் ஆரம்ப காலத்தில் மணியக்காரன், வன்னியனார் என்ற பதவிகளும் பின்னர் காரியாதிகாரி அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் என்ற பதவியாகவும் அதன் பின்னர் பிரதேச உதவி அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் என மாற்றமடைந்து தற்போது பிரதேசச் செயலாளர்கள் (அதிகாரக் கைமாறல்) சட்டத்தின்படி நியமிக்கப் பட்டுள்ளார்கள். அந்தவகையில் அட்டாளைச்சேனையும் ஒரு பிரதேசச் செயலகப் பிரிவாக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசச் செயலகப் பிரிவானது அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தீகவாபிய ஆகிய நான்கு முக்கிய கிராமங்களை உள்ளடக்கிய 32 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. அட்டாளைச்சேனைக் கிராமம், பாலமுனை, ஆலங்குளம், கற்சேனை, கோணவத்தை, பாலமுனையானது, சின்னப்பாலமுனை, திராய்க்கேணி ஆகியவைகளையும், சிறு கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளது. மேலும், இப்பிரதேசத்தில் அண்மைக் காலத்தில் 3 மாதிரிக் கிராமங்கள் உருவாக்கப்பட்டன. அவைகளாவன :

1. ஹுசைனியா நகர்

2. மீலாத் நகர் (முல்லைத்தீவு)
3. திராய்க்கேணி (மீள் குடியேற்றக் கிராமம்)

### சமூக அம்சங்கள் :

அட்டாளைச்சேனைப் பிரதேசம் மூன்று இன மக்களையும் கொண்ட பிரதேசமாகும். குடிசனத்தை நோக்கின் இப்பிரதேசத்தின் முக்கிய வளமாக மனிதவளம் காணப்படுகின்றது. மக்கள் தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் பொருளாதார விருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றார்கள். இதில் ஆண், பெண் இருபாலாரும் பங்களிப்புச் செய்கின்றார்கள்.

இப்பிரதேசத்தின் சனத்தொகைக் கணக்கெடுப்பு ஒன்றின்படி பின்வரும் விடயங்கள் சனத்தொகை பற்றிய சில விளக்கங்களைத் தந்துள்ளது. பின்வரும் அட்டவணை – I அட்டாளைச்சேனைப் பிரதேசசெயலகப் பிரிவால் செய்யப்பட்ட (1998 ஆம் ஆண்டு) கணிப்பீடாக உள்ளது.

### அட்டவணை – I

### அட்டாளைச்சேனைப் பிரதேச மக்கள் தொகை பற்றிய சில அம்சங்கள் – 1998

| பால் ரீதியாக | தொகை | வீதம் |
|---|---|---|
| ஆண்கள் | 19,696 | 49.83 |
| பெண்கள் | 19,832 | 50.17 |
| மொத்தம் | **39,528** | **100.00** |

மூலம் : மூலவளத் திரட்டு பிரதேச செயலகம் – அட்டாளைச்சேனை – 1998

அட்டவணை ஒன்றின்படி நோக்கும் போது இப்பிரதேசமானது 39,528 பேரை மொத்த சனத்தொகையாகக் கொண்டுள்ளது எனலாம். இதில் 19,696 பேர் ஆண்களாகவும், 19,832 பேர் பெண்களாகவும் காணப்படுகின்றனர். இதன்படி நோக்குகின்றபோது 0.34% வீதத்தால் பெண்களின் தொகை அதிகமாகக் காணப்படுகின்றது. எனினும், தொழில்வாய்ப்புக்களில் பெண்களின் பங்களிப்பு குறைவு எனலாம். பெரும்பாலும் இப்பகுதிப் பெண்கள் தங்கிவாழ்வோராகவும் இளவயதினராகவும் காணப்படுகின்றனர்.

இனவாரியான சனத்தொகை பற்றி நோக்கின் பின்வரும் அட்டவணை – II சில விளக்கங்களைத் தருகின்றது.

## அட்டவணை – II

**இனவாரியான சனத்தொகை – அட்டாளைச்சேனை – 1998.**

| இனம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம்கள் |
|---|---|---|---|
| மொத்தம் | 2203 | 470 | 36855 |
| வீதம் | 5.57 | 1.19 | 93.24 |

மூலம் : மூலவளத்திரட்டு – பிரதேச செயலகம் – அட்டாளைச்சேனை – 1998.

அட்டவணை – II இன்படி மொத்த மக்கள் தொகையில் 5.57% வீதமானோர் பௌத்தர்களாகவும், 1.19% வீதமானோர் தமிழர்களாகவும், 93.24% வீதமானோர் முஸ்லீம்களாகவும் இப்பிரதேசத்தில் வசிக்கின்றனர் என்று 1998 ஆம் ஆண்டு செய்யப்பட்ட கணிப்பீடு ஒன்று கூறுகின்றது. இவ்வறிக்கையின்படி அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் முஸ்லீம்கள் இன ரீதியாகக் கூடுதலாக உள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது. அட்டாளைச்சேனை 1 – 17 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

## பொருளாதாரமும் தொழில்வாய்ப்புக்களும் :

தொழில்வாய்ப்பில் ஆண்களின் பங்களிப்பு இங்கு கூடுதலாகக் காணக் கிடைக்கின்றது. அது மட்டுமன்றி தொழில்வாய்ப்புக்களில் பெண்கள் குறைவாகவும், தரம் குறைந்த தொழில்களிலும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பெண்கள் தொழில் ரீதியாகப் பின்தங்கி இருப்பதற்கு இப்பிரதேசத்தின் பௌதீக நிலை மாத்திரமன்றி சமூக, பொருளாதார, கலாச்சார பாரம்பரிய முறைகளும் காரணமாகின்றன. இருப்பினும், இன்று இந்நிலை ஓரளவு மாறி பெருமளவு பெண்கள் வெளிநாட்டுப் பணிப்பெண்களாகச் சென்று வருவது குறிப்பிடக்கூடிய அம்சமாகின்றது. இப்பிரதேசத்திலிருந்து கணிசமான அளவு முஸ்லிம் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிகின்றார்கள். மத்திய கிழக்கு நாடுகளின் சம்பளக் கவர்ச்சியே இத்தகைய நிலைக்குப் பிரதான காரணி. அது மட்டுமன்றி இப்பிரதேசத்திலிருந்து ஆண்களும் வெளிநாட்டுத் தொழில்களைத் தேடிச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு பால் வேறுபாடின்றி இப்பிரதேச மக்கள் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்கு மற்றுமொரு பிரதான காரணி இப்பிரதேசத்தில் அல்லது நாட்டில் காணப்படும் தொழிலில்லாப் பிரச்சினையும் இப்பிரதேசத்தில் காணப்படும் பௌதீக, பொருளாதார விருத்தியின்மையும் ஆகும். அத்துடன் தொழிலுக்கான போட்டிநிலை, கல்வி அறிவு, அரசியல் செல்வாக்கு என்பன இப்பிரதேசத்தின் தொழில் வளங்களை நிர்ணயித்து வருகின்றன. பட்டம்பெற்று வெகு காலமாகியும் தொழிலின்றி அல்லலுறும் தொழிலற்ற பட்டதாரிகளுள் அநேகம்பேர் அரசாங்க உத்தியோகங்களை எதிர்பார்த்து வேலை வங்கியில் தமது பெயர்களைப் பதிவு செய்துவிட்டுத் தொழிலுக்காகக் காத்திருக்கின்றனர்.

அட்டாளைச்சேனைப் பிரதேச தொழில்வாய்ப்புக்களை நிர்ணயிக்கின்ற மிகப் பிரதானமான பொருளாதார நடவடிக்கைகளுள் விவசாயமே இங்கு பிரதான இடம்வகிக்கின்றது.

விவசாய நடவடிக்கைகள் எனும் போது இங்கு மீன்பிடி, சிறுகைத் தொழில்கள் பிரதான இடம்பெறும். அதிக மக்கள் நெல் விவசாயத்தையும் குறைந்தளவினர் சிறுகைத்தொழில்களையும் ஏனையோர் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு, அரசாங்க உத்தியோகம் ஏனைய சுயதொழில் வாய்ப்புக்களிலும் ஈடுபடுகின்றனர். இப்பகுதியில் கூடுதலாக ஆண்கள் அரசாங்கத் தொழில்களில் ஈடுபடுகின்றனர். 1998ஆம் ஆண்டு அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகக் கணிப்பீடு ஒன்றின்படி 794 ஆண்களும், 102 பெண்களும் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் விவசாயத்திலும் ஏனைய தொழில்களிலும் கூட ஆண்களின் பங்களிப்பு கூடுதலாக உள்ளதைக் காணமுடிகிறது.

கைத்தொழில் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் புதுப்பிக்க முடியாத வளமாகிய கனியவளம் இப்பகுதியில் மிகமிகக் குறைவே. எனவே, இப்பிரதேசத்தில் பிரதான இடம்வகிக்கும் விவசாயம் சார்ந்த கைத்தொழில்களைக் கூடுதலாகக் காணமுடியும். சிறுகைத்தொழில் (ஓட்டுத் தொழில்) குடிசைக் கைத்தொழில் (பாய், பெட்டி, கிடுகு இழைத்தல், விசிறி, பெட்டி செய்தல்) என்பன பிரதான இடம்பெறுகின்றது. இதற்குப் பனை ஓலை, தென்னை ஓலை, பன் என்பன பிரதான மூலப்பொருளாகக் கொள்ளப்படுகிறது. குடிசைக் கைத்தொழிலில் பெண்களே கூடுதலாக ஈடுபடுவர்.

சுருக்கமாகக் கூறின், இப்பிரதேசத்தின் தொழில்வாய்ப்புக்களை நிர்ணயிப்பதிலும் பொருளாதார விருத்தியைத் தீர்மானிப்பதிலும் விவசாயமும், மீன்பிடியும் தான் பிரதான இடம் வகிக்கின்றது.

**விவசாய நிலப் பயன்பாடு :**

பயிர்ச்செய்கையை நோக்கின் நெற்செய்கையே கூடுதலாக செய்கை பண்ணப் படுகின்றது. (34.50%) அதாவது 32,598 சதுர கிலோ மீற்றர் பரப்பில் நெல் பயிரிடப்படுகிறது. ஏனைய விவசாய நிலப்பயன்பாட்டை நோக்கின் குறைவு என்றே கூற முடியும். கரும்புச் செய்கை 4.32% மான (4,480 சதுர கிலோ மீற்றர்) பரப்பில் பயிரிடப்பட்டது. ஆனால், இதுவும் இன்று கைவிடப்பட்ட நிலையில் உள்ளமை காணப்படுகிறது. இதனால் மக்கள் இதனுடன் சம்பந்தப்பட்ட தொழில்வாய்ப்புக்களை இழந்துள்ளனர்.

**மீன்பிடி :**

இப்பிரதேசத்தில் பெரும் கடல் நீர்ப்பரப்புக் காணப்பட்ட போதிலும் நவீன துறைமுக வசதிகள் இன்மையால் கடல் மீன்பிடி குறைவாகவே காணப்படுகின்றன. அட்டாளைச்சேனைப் பிரதேசத்திலுள்ள ஒலுவில் கிராமத்தின் கடற்கரையை மையமாக வைத்து உத்தேசமாகத் துறைமுக அபிவிருத்தி வேலைகள் தொடக்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்கான சமிக்ஞையாகும். இதன் மூலம் எதிர்காலத்தில் தொழில் வாய்ப்புக்கள் பெருகும் வாய்ப்பு தென்படுகின்றது.

நன்னீர் மீன்பிடியை நோக்கின் இது அட்டாளைச்சேனையின் கோணவத்தை ஆற்றிலும், களியோடை ஆற்றிலும் ஓரளவு இடம்பெறுகின்றது. எனினும் இது போதியளவு வருவாயையோ, தொழில்வாய்ப்பையோ தரவில்லை எனலாம். எனவே, இங்கு நன்னீர் மீன்பிடி நவீனமுறையில் அபிவிருத்தியை வேண்டி நிற்கின்றது.

## கனிப்பொருள் :

ஓரளவு களி மாத்திரம் கைத்தொழில் மூலப் பொருளாக இங்கு பெற முடிகின்றது. பாலமுனை – 01லும், அட்டாளைச்சேனை – 17ஆம் பிரிவு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும், ஒலுவில் – 01இலும் உள்ள கிராமங்களிலும் களி ஓரளவு பெற முடிகின்றது. இதன் மூலம் செங்கல் ஓட்டுக் கைத்தொழில் இங்கு சிறியளவில் இடம்பெறுகின்றது. இதில் ஆண்களின் ஈடுபாடே கூடுதலாக உள்ளதைக் காணலாம்.

## பொதுவான போக்கு :

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தின் பொருளாதார விருத்தியில் பல்வேறு சமூக, பொருளாதார, சமய, கலாசாரக் காரணிகள் பங்கெடுக்கின்றன. இங்கு அதிகம் வறிய மக்கள் வாழ்கின்றனர். மக்கள் தொகையில் 59.67% வீதத்துக்கு அதிகமானோர் உணவு முத்திரை, சமுர்த்தி உதவிகளையும் பெறுகின்றனர் என்பதனை அட்டாளைச்சேனைப் பிரதேச செயலக – 1998 வெளியீடு ஒன்று கூறுகின்றது. மேலும், இப்பிரதேசத்தில் 50% சதவீதத்திற்கு மேற்பட்டோர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். 20% சதவீதமான குடும்பத்தினர் தருமப் பணம் (பொதுசன மாதாந்த உதவிப் பணம்) பெறுபவர்களாக உள்ளனர். இந்தவகையில் இப்பிரதேச வருமான நிலைகளை நோக்க முடிகின்றது. இப்பிரதேசத்தில் அரசாங்க உத்தியோகம் பார்ப்போர் 8.43% சதவீதம் தனியார் நிறுவனங்களில் தொழில் புரிவோர் 0.75% சதவீதமாகவும் சுயதொழிலில் ஈடுபடுவோர் 76.07% சதவீதத்தினராகக் காணப்படுகின்றனர். இதனடிப்படையில் நோக்கின் இப்பிரதேசத்தில் பெருமளவு மக்கள் சுயதொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுவதை அறிய முடிகின்றது. (மூலவளத்திரட்டு – 1998)

சூழல் மாசடைதல் விடயத்தை நோக்கின் இப்பிரதேசத்தில் அரிசி ஆலைகள் மூலம் சூழல் மாசடைவது குறைவு எனலாம். காரணம் போதிய நிலப் பரப்பையும் மக்கள் அடர்த்தி குறைந்த பகுதிகளிலும் இவ் ஆலைகள் பெரும்பாலும் அமைக்கப்படுகிறது. மர ஆலைகள் மூலம் சூழல் மாசடைதலும் குறைவு எனலாம். ஆனால், மக்களின் நாளாந்த குப்பைகளை அகற்றும் பணிகள் அரசாங்கத்தினால் சரிவர மேற்கொள்ளப்படாமையின் காரணத்தினாலும் மக்கள் குப்பை கூழங்களைக் கவனிப்பாரற்ற மனித குடியிருப்புக்களைக் கொண்ட பகுதிகளிற்கிடையிலும் கோணவத்தை ஆற்று ஓரங்களிலும் கொட்டுவதனால் நுளம்பு, ஈ, எலி போன்றன பெருகவும் கட்டாக்காலி நாய்கள் என்பன பெருகும் நிலை, வளி மாசடைதல் துர்நாற்றம் என்பன இங்கு தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. எனவே, தகுந்த நடவடிக்கைகளை அரசாங்கம் இது விடயத்தில் எடுக்க வேண்டிய நிலை உள்ளது. நீர் மாசடைதல் எனும் போது கோணவத்தை ஆற்றில் போடப்படும் கழிவுகள் காரணமாகவும் கோணத்தை ஆற்றில் படரும் சல்வீனியா போன்ற நீர்த்தாவரங்களின் தாக்கம் காரணமாக நீர் மாசடைகின்றது. எனவே, தீர்வாக மக்கள் தமது நாளாந்த வீட்டுக் கழிவுகளைத் தங்களது சொந்த நிலப் பரப்புக்களிலேயே குழி தோண்டிப் புதைப்பதன் மூலமோ அல்லது எரிப்பதன் மூலமோ சூழலைப் பேண முடியும். சல்வீனியா போன்ற நீர்த்தாவரங்களைத் தகுந்த நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தி கோணவத்தை ஆற்று நீரோட்டத்தைச் சீர் செய்ய முடியும். அத்துடன் நீர் நிலைகளின் தூய்மை கெடாதவாறு குப்பை கூழங்களை ஆற்றுக்கு அருகில் போடாது தவிர்க்க வேண்டும். இவ்வாறு பாதுகாப்பதன் மூலம் இவ்வழகிய அட்டாளைச்சேனைப் பிரதேசத்தின் சூழலைப் பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமையாகிறது.

## முடிவுரை :

முஸ்லீம்களை அதிகமாகக் கொண்ட அட்டாளைச்சேனைப் பிரதேசத்தின் சமூக, பொருளதார வேலைவாய்ப்புக்களில் விருத்தி ஏற்பட வேண்டுமாயின் பால் வேறுபாடின்றி தமது உழைப்பினை நல்குவதற்கு மக்கள் முன்வரவேண்டும். கல்வி விருத்தியடைய வேண்டும். இப்பிரதேசத்தின் விவசாய வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். இதற்கு இப்பிரதேச மக்களினதும், அரசினதும் ஒத்துழைப்பு அவசியமாகத் தேவைப்படுகின்றது.

## உசாத் துணைகள்


| | |
|---|---|
| 1. SIR. RAZIK FAREED | A History of the Muslims in Sri Lanka. |
| 2. W.I. SRIWEERA | A Study of Economic History of Pre Modem Sri Lanka. |
| 3. மா.செ. மூக்கையா | அபிவிருத்திக் கல்விக்கு ஓர் அறிமுகம். |
| 4. S.H.M. ஜெமீல் | அம்பாறை மாவட்ட முஸ்லீம்கள் கல்வி, சமய அலுவல்கள் அமைச்சு, இலங்கை – 1997. |
| 5. பொருளியலாளன் | மலர் 2, இதழ் 4, டிசம்பர் – 1988, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| 6. மூலவளத்திரட்டு | பிரதேச செயலகம், அட்டாளைச்சேனை –1998. |